| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>செல்லையன் | அ.வ.எண். 16/2018 | 30.09.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்தை பொறுத்த பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் 45 சதுரமீட்டர் ராமன் பெயரிலும், எனது தகப்பனார் சிலம்பர் பெயரில் 45 சதுரமீட்டரும் பட்டா உள்ளது. வா.சா.ஆ.1 எனக்கு எனது தாத்தா ராமசாமி எழுதி வைத்த உயில் ஆவணம் ஆகும். மேற்படி ராமசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 மகன்கள் 1 மகள் ஆவார்கள். மேற்படி வாரிசுகளின் பெயர்கள் ராமன், சிலம்பன், செல்லம்மாள் ஆகும். ராமசாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாத்தா (அப்பாவின் தந்தை) ஆவார். நாங்கள் கூட்டுகுடும்பமாக வசித்து வந்தோமா என்றால் வசித்து வந்தோம் எங்களுக்கு திருமணம் நடைபெற்ற பிறகு தனியாக வந்துவிட்டோம்.

2) மேற்படி ராமன், சிலம்பன், செல்லம்மாள் ஆகியோருக்கு இடையே சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எப்போதிலிருந்து ராமன் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா எப்போது இறந்துபோனார் என்றால் 1996 ல் இறந்து போனார். எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வா.சா.ஆ.1 உயில் ஆவணம் ஏற்பட்டிருந்தால் தாவா சொத்தை பொறுத்த பட்டாவின் பெயரில் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் பட்டா பற்றிய விபரம் தெரியாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்து ராமனுக்கு பிரிந்த விபரம் எனக்கு தெரியும் என்ற காரணத்தினாலும் வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்ற காரணத்தினாலும் தான் தாவா சொத்தை பொறுத்து பட்டா மாற்றம் செய்ய

நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் சரியல்ல, நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன்.

3) வா.சா.ஆ.15 முதல் 17 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்தை பொறுத்த ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.189/15A1 வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் கண்டு எழுதப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 ஆவணத்தில் பழைய சர்வே எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 பட்டாவிற்கும் வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.188/16 மற்றும் 188/17 ல் கண்ட சொத்துக்களை தான் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான், அது காட்டு நிலம் ஆகும். நான் நத்தம் வகைப்பாட்டை சேர்ந்த இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நத்தம் இடத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.1 ஆவணத்தில் நத்தம் இடம் சர்வே எண்.203/1 கிழமேல் ஜாதியடி 40 தென்வடல் ஜாதியடி 30ல் உள்ள ஓட்டுவில்லை கூரைக்கட்டுக்கோப்புக்கு தான் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 பட்டா ஒரு செண்ட் இடத்திற்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதன் காரணமாக தாவா சொத்திற்கும் மேற்படி வா.சா.ஆ.14 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தை பொறுத்து வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பழைய சர்வே எண்ணிற்கு தாவா புல எண் தான் புதிய புல எண் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 2வது அட்டவணை சொத்து தான் ராமன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்து பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்து அதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் விசாரணைக்கு 1ம் பிரதிவாதி ராமன் தரப்பில் ஆஜராகவில்லை. பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்து அதன் பேரில் விசாரணை நடைபெற்றது அந்த விசாரணையில் 1ம் பிரதிவாதி தனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்து தாவா 2வது அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று நிரூபணம் செய்துள்ளார் என்றாலும் மேற்படி விபரங்களை மறைத்து நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட பட்டா எண் என்னவென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6) தாவா சொத்தின் பட்டா எண்.181 மற்றும் 518 என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு நான் எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 பட்டா முறையாக விசாரணை செய்து எனக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் மேற்படி ஆவணம் மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி ராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்து நாளது தேதி வரை 1ம் பிரதிவாதி பெயரிலும் எனது தகப்பனார் சிலம்பன் பெயரிலும் கூட்டாக பட்டா உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7) எனது தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி கூட்டு பட்டாவில் கண்ட சொத்து ராமனுக்கு பிரிந்த சொத்து என்ற காரணத்தினால் அதை பொறுத்து தனிப்பட்டா வாங்க என்னிடம் வாக்குமூலம் கேட்டார்களா என்றால் இல்லை. நான் வருவாய் துறையில் கொடுத்த மனுக்களில் நாளது தேதி வரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக விசாரணை செய்யாத காரணத்தினால் மேல்முறையீடு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் மாவட்ட ஆட்சிதலைவர் வரை மனு கொடுத்துள்ளேன். மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக வருவாய் துறையினர் நடவடிக்கை எடுப்பதற்கு நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியானது அல்ல என்றால் சரியல்ல. தாவா 2 வது அட்டவணை சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் வா.சா.ஆ.1 பட்டா மோசடியான ஆவணம் என்ற காரணத்தினாலும் தான் பட்டா எனது பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 16.10.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)